

# LLRC அறிக்கையின் சுருக்கம்

இலங்கை தேசிய சமாதானப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LLRC அறிக்கையின் சுருக்கம்

இலங்கை தேசிய சமாதானப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**LLRC** அறிக்கையின் சுருக்கம்

தொகுத்துவழங்குபவர்:
ரெபெக்காபிரவுன் - **VSO**

வடிவமைப்பு:
உபேந்திரபெரேரா

மொழிபெயர்பு
க.இந்திராதேவி

மூலப்பிரதி பார்வையிடல்
வ.சண்முகராஜ்

வெளியீடு:
இலங்கைதேசியசமாதானப் பேரவை,
12 14 புரானவிஹாரைவீதி,
கொழும்பு 06,
இலங்கை.

நிதிஅனுசரனை:
டைகோனியா **(DAIKONIA)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

அண்மைக்காலங்களில் அரசாங்க தரப்பினால் வெளியிடப்பட்ட ஆவணங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லினக்கத்திற்குமான ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை (LLRC) மிகமுக்கியமான தொன்றாகும். யுத்தம் முடிவுற்றதன் பின்னர் இலங்கையின் மிக முக்கியமான பொதுத்துறை சார்ந்த பிரமுகர்கள் சிலர் நாட்டின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து தாம் நேரில் கண்டறிந்த யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளையும் தனிப்பட்டவர்களும், நிறுவனங்களும் சமர்பித்த தகவல்களையும் செவிமடுத்ததனை அடிப்படையாகக்கொண்டதாக இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் இனமுரண்பாடுகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகளை பற்றி நாட்டு மக்களிடையே போதிய புரிந்துணர்வினை ஏற்படுத்துவதனையும் தனது ஆணையாகக் கொண்டுள்ள ஒரு சிவில் நிறுவனமான தேசிய சமாதானப்பேரவை கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவிடம் தனது கருத்துக்களை சமர்ப்பித்திருந்தது. அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து சிபாரிசுகளுமே அரசாங்கத்தினால் நடைமுறைப்பத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே நாட்டின் எதிர்காலம் பொறுத்து எதிர்மறையற்ற வகையில் சார்பான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய உள்ளார்ந்த வளத்தினை இவ்வறிக்கை (LLRC) கொண்டுள்ளது. யுத்தகால குற்றங்களுக்கு பொறுப்பு கூறுதல், யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை பிரச்சினைகள் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணைகளில் வரையறைகள் பல காணப்பட்டுள்ள போதிலும் யுத்தம் முடிவுற்றதன் பின்னரும் கூட இன ரீதியானதும் சமயங்களுக்கிடையிலானதுமான பதட்டங்கள் அதிகரிதுச் செல்லும் இக் காலகட்டத்தில் LLRC அறிக்கையானது புரிந்துணர்வினை ஏற்படுவதற்கு ஏற்றதொரு கல்வி மற்றும் தகவல் தரும் ஆவணமாக இவ்வறிக்கையினை நாம் ஏற்றுக்கொள்ள விரும்புகின்றோம். இவ்வறிக்கை (LLRC)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆவணமாதலால், அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் பெறுமானங்களையும் விமர்சிக்கும் சாராரை கடுமையாக கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சித்து வரும் இன்றைய காலகட்டத்தில் இவ்வறிக்கை ஒரு சட்டபூர்வமான கற்பதற்கான கருவியாகவும் பயன்படக்கூடியதாக உள்ளது.

ஆங்கிலத்தில் 388 பக்கங்களைக் கொண்ட இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் பற்றி இலகுவாக அறிந்துக் கொள்ள விரும்புபவர்களுக்கு, அறிக்கையின் சுருக்கத்தினையும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான சிபாரிசுகளையும் வழங்குவதில் நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வறிக்கையை (LLRC) நன்கு வாசித்தறிந்து அதில் உள்ள அத்தியவசியமான பகுதிகளை வடித்தெடுத்து சுருக்கமாக வடிவமைத்துத் தந்த ரெபெக்கா பிரௌன் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். அத்துடன் அறிக்கையின் சுருக்கத்தை கைநூலாக தயாரித்து அவற்றின் பிரதிகளை இலவசமாக வாசகர்களுக்கு வழங்க போதிய நிதி வசதியை அளித்து ஆதரவு வழங்கிய ரோயல் நோர்வேஜியன் தூதரகத்திற்கும் டைகோனியா நிறுவனத்திற்கும் நாம் பெரிதும் நன்றியுடையவர்களாவோம்

ஜெஹான் பெரேரா
நிர்வாக இக்குனர்
ஜூலை 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோக்கம்

இந்த அறிக்கை பற்றி புரிந்த கொண்டிராதவர்களுக்கு கற்றறிந்த மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உள்ளடக்கத்தின்படி சிவில் சமூகத்தினால் செய்யப்பட வேண்டிய சில விடயங்கள் தொடர்பாக வாசிப்பதற்கு இலகுவான முறையில் சுருக்கம் ஒன்றை வழங்குவதே இப் புத்தகத்தின் முக்கிய நோக்கமாகும்.

## எல்.எல்.ஆர்.சி ஆணைக்குழுவினை அமைத்தல்

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு 26 வருட காலமாக நாட்டில் இடம்பெற்று வந்த சிவில் யுத்தம் முடிந்த பின் 2010ஆம் ஆண்டு மே மாதம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவாகும். சிவில் யுத்தத்தின் பல்வேறு பக்கங்களை ஆராய்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல், எதிர்காலத்தில் இவ்வாறான மோதல் ஒன்று ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்குத் தேவையான நிறுவன ரீதியான மறு சீரமைப்புக்களைக் கட்டி எழுப்புவது இந்த ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாகும்.

## ஆணைக்குழுவின் அதிகார ஒப்படைப்பு

## எல்.எல்.ஆர்.சிக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் கீழ் வருமாறு:

2002 பெப்ரவரி 21 ஆம் திகதியும் மற்றும் 2009 மே 19 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்துக்குள் இடம்பெற்ற பின்வரும் காரணிகள் தொடர்பாக விசாரித்து அறிக்கையிடுதல்.

1. யுத்த நிறுத்த இணக்கப்பாடு ஆரம்பிக்கப்பட்ட 2002 பெப்ரவரி 21 ஆம் திகதிக்கு முதல் அது வெற்றியடையாமைக்கான காரணிகள் மற்றும் சந்தர்ப்பங்கள் மற்றும் அத் திகதியிலிருந்த 2009 மே 19ஆம் திகதி வரை இடம்பெற்ற நிகழ்வுகளின் முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இதுதொடர்பாக யாதேனும் ஒரு நபரோ, குழுக்களோ அல்லது நிறுவனமோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பு ஏற்கின்றார்களா என்பதும்.

3. இவ்வாறான ஒரு நிகழ்வு மீண்டும் ஏற்படாதிருப்பதற்காக இந்த நிகழ்வுகளும் மற்றும் அதன் காரணமாக ஏற்பட்ட வேதனைகள் மூலம் நாம் படிக்க வேண்டிய பாடங்கள்.

4. இந்த நிகழ்வு காரணமாக பாதிக்கப்பட்ட நபரொருவருக்கோ, அல்லது அவரில் தங்கி வாழ்கின்றவருக்கோ அல்லது அக்காரணத்தினால் பாதிக்கப்பட்ட உரித்தான எவருக்கும் ந்'டஈடு வழங்கும் முறை.

5. எதிர்காலத்தில் அப்படியான அனர்த்தங்கள் மீண்டும் ஏற்படுவதனைத் தடுப்பதற்கு சகல மக்களிடையேயும் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நிறுவன, நிர்வாக மற்றும் சட்டவாக்க நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப ஆராயும் ஏனைய காரணிகள் தொடர்பாக சிபாரிசுகளை முன்வைத்தல்.

அறிக்கையின் பந்திகள் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட வரிசைக்கு ஏற்பவாகும்.

ஆணைக்குழு எட்டு அங்கத்தவர்களைக் கொண்டதாகும். இவ் ஆணைக்குழுவில் ஐந்து சிங்கள அங்கத்தவர்களும் இரு தமிழ் அங்கத்தவர்களும் ஒரு முஸ்லிம் அங்கத்தவரும் உள்ளடங்கியிருந்தனர். இவர்களில் ஒருவர் பெண் அங்கத்தவராவார். ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவர முன் இரு அங்கத்தவர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர். இந்த இரு அங்கத்தவர்களுக்குப் பதிலாக வேறு இரு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணையாளர்களின் பெயர்கள்

1. திரு சிந்தா ரன்ஜன் டி சில்வா (தவிசாளர்), ஜனாதிபதி சட்டத்தரணி, சட்டமா அதிபர் (2007 - 2009), சொலிசிடர் ஜெனரல் (1999 - 2007), பிரதி சொலிசிடர் ஜெனரல் (1992- 1997)
2. கலாநிதி சமித் ரோஹான் பெரேரா - ஜனாதிபதி சட்டத்தரணி, வெளிவிவகார அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகர், சர்வதேச நீதி ஆணைக்குழுவின் தற்போதைய அங்கத்தவர்.
3. பேராசிரியர் கருணாரத்ன ஹங்கவத்த - குற்றவியல் நீதித்துறை தொடர்பான பேராசிரியர் குற்றவியல் நீதித் திணைக்களம், நெவாட பல்கலைக்கழகம் மற்றும் ஐ.நாவின் முன்னாள் ஆலோசகர்.
4. திரு. சந்திரபால் சண்முகம் - நீதி அமைச்சின் செயலாளர் (1987 - 1988)
5. ஹேவா மாத்தற கமகே சிறிபால - பலிஹக்கார முன்னாள் செயலாளர், வெளிவிவகார அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதி.
6. திருமதி. மனோஹரி ராமநாதன் - முன்னாள் பிரதி சட்டவாக்க உத்தியோகத்தர் மற்றும் இலங்கை நீதிச்சபை அங்கத்தவர்.
7. மக்ஸ்வேல் பராக்கிரம பரணகம - ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர்.
8. திரு. முஹம்மத் தௌபீக் பாபீக் - சிரேஷ்ட சட்டத்தரணி, மற்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அங்கத்தவர்.

ஆணைக்குழுவின் செயலாளர்களாக முன்னாள் தூதுவர் திரு. எஸ். பி. உடுகொட பணிபுரிந்தார்.

## எல்.எல்.ஆர்சியின் கட்டமைப்பு

பந்தி 1- அறிமுகம் மற்றும் செயன்முறை

பந்தி 2- யுத்த நிறுத்த இணக்கப்பாடு

பந்தி 3- பாதுகாப்பு படையினரின் நடவடிக்கை பற்றிய முழுமையான விபரம்

பந்தி 4- மனிதாபிமான சட்டத்துடன் தொடர்பான பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தி 5- மனித உரிமை
பந்தி 6- காணிப் பிரச்சினை, மீண்டும் வருதல் மற்றும் மீள்குடியேற்றம்
பந்தி 7- உரிமையாளர்களுக்கு மீண்டும் தமது காணிகளை கையளித்தல்-நஷ்டஈடு வழங்குதல்
பந்தி 8- நல்லிணக்கம்
பந்தி 9- ஆரம்ப கண்காணிப்பு மற்றும் சிபாரிசுகளின் சுருக்கம்

## 1ஆம் பந்தி : ஆணைக்குழுவின் செயன்முறைகளும் மற்றும் செயற்பாடுகளும்

2010 ஆகஸ்ட் 11 ஆம் திகதியிலிருந்து 2011 ஜனவரி 31 ஆம் திகதி வரை ஆணைக்குழுச் சாட்சியங்களைப் பதிவு செய்தது. இதற்காக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர், இராணுவத்தினர், அரசியல்வாதிகள், மற்றும் கற்றறிந்த நிபுணர்கள் முன்வந்திருந்தனர். விசாரணைகள் கொழும்பிலும் வடக்குக் கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றிருந்தன. இலங்கையின் நிலை தொடர்பாக தமது கருத்துக்களை முன்வைக்குமாறு அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டன என்றும் Human rights watch சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் International crisis group ஆகியன இந்த அமைப்பினை ஏற்கவில்லை. 2010 செப்டெம்பர் 13 ஆம் திகதி தடுத்து வைத்தல் சட்டத்தின் ஆதிபத்தியம், காணி நிர்வாகம், மற்றும் மொழிப்பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளை உள்ளடக்கி தமது இடைக்கால அறிக்கையை ஆணைக்குழு ஜனாதிபதிக்கு கையளித்தது. 2011 ஜனவரி 31 வரை பகிரங்க சாட்சியங்களை செவிமடுத்த தோடு 2011 யூன் 13 ஆம் திகதி வரை எழுத்து மூலம் சாட்சியங்களைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. எல்.எல்.ஆர்.சி அமைப்பு அறிக்கையினை ஜனாதிபதிக்கு கையளித்த பின், அது 2011 டிசம்பர் 16 ஆம் திகதி பொது மக்களுக்கு அறிந்து கொள்வதற்காக வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் பந்தி: யுத்த நிறுத்த இணக்கப்பாடு

இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்களுடன் 2002 இல் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை நோர்வே மத்தியஸ்ததுடன் மேற்கொள்ளப்பட்டது. ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்ட இறந்த ஒரு விடயம் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏன் தோல்வி கண்டது என்பதனை ஆராய்வதாகும். அதன் எண்ணக்கருவின் குறைபாடு, நோர்வே அரசு அதனை மத்தியஸ்தம் செய்ததோடு, அதன் மேற்பார்வை செய்த இரட்டைப் பணியை மேற்கொண்டமை விமர்சனத்துக்குள்ளானதோடு, யுத்த நிறுத்த உடன்படிக்கை செயற்பாட்டில் ஒரு தரப்பாக எல்.ரீ.ரீ.ஈயினை அங்கீகரித்தல் குறிப்பாக எல்.ரீ.ரீ.ஈ பிரதேசம் என அவர்கள் இலங்கையின் பௌதீக தொடர்பினை கணக்கில் எடுக்காமை என்பன பற்றி எல்.எல்.ஆர்.சி விமர்சிக்கின்றது. இறுதியாக எல்.ரீ.ரீ.ஈ சமாதான நடவடிக்கைகளை நேர்மையாக பங்குகொள்வதனை நிராகரித்தமையால் யுத்த நிறுத்த இணக்கப்பாடு தோல்வி கண்டதாக ஆணைக்குழு தீர்மானிக்கின்றது.

3 ஆம் பந்தி : பாதுகாப்பு படையினரின் நடவடிக்கை பற்றிய ஒட்டு மொத்தமான நோக்கு

பாதுகாப்புப் படையினர் வட கிழக்கில் மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய விபரம் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு 2006 யூலை முதல் 2009 மே வரையான காலகட்டத்துக்குள் நடவடிக்கைகளின் போது, 55,256 பேர்களில் 28, 414 பேர் காயங்கள் அடைந்துள்ளதோடு, 169 காணாமற் போயுள்ளதாக அது தெரிவிக்கின்றது. 22247 எல். ரீ.ரீ.ஈ படையினர் கொல்லப்பட்டுள்ளதோடு அவர்களில் 11812 பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

4 ஆம் பந்தி: மனிதாபிமான சட்டம் பற்றிய பிரச்சினை

யுத்த சூன்ய வலயம் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பொது மக்களின் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு வெளியிடப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப அரசாங்கம் யுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூன்ய பிரதேசம் ஒன்றை பிரகடனப்படுத்தியது. இதனால் பாதுகாப்பு படையினருக்கு தங்களது நடவடிக்கைகளை யுத்த சூன்ய பிரதேசங்களுக்கு கௌரவமளித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. எல்ரீரீஈ பொது மக்களுக்கு மோதல் நடைபெறும் பகுதிகளில் இருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதற்கு இடமளிக்கவில்லை என ஆணைக்குழு கண்டுபிடித்துள்ளதோடு, பொது மக்கள் யுத்த சூன்ய பிரதேசங்களுக்கு தப்பிச் செல்ல முற்பட்ட போது, அவர்களுக்குள்ளே இருந்த எல்ரீரீஈ நபர்கள் அரச படையினருக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதனால் படையினரை பதிலடி மேற்கொள்வதற்கு நிர்ப்பந்தித்ததாக சாட்சிகள் தெரிவித்துள்ளதோடு, படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளும் போது, பொதுமக்களை இலக்காகக் கொண்டு செய்யவில்லை. இதன்படி பாதுகாப்புப் படையினர் சர்வதேச மானசீக சட்டத்தை மீறவில்லை என்று ஆணைக்குழு தீர்மானிக்கின்றது. (9.6)

பொதுமக்களுக்கு மரணம் மற்றும் காயங்கள் ஏற்பட்ட விசேட சந்தர்ப்பங்கள்: பொது மக்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் நோக்கத்தில் அன்றிக்கூட படையினரால் பொதுமக்கள் படையினர் கையினால் கொல்லப்பட்டு காயத்துக்குள்ளாக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த சாட்சியங்களில் இருந்து தென்படுவதாக எல்.எல்.ஆர்.சி அறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது.

பொதுமக்களது மரணம் தொடர்பான மொத்த புள்ளி விபரங்கள் அடங்கிய உத்தியோகபூர்வ அறிக்கைகள் எதுவும் இல்லாமல் குறித்து ஆணைக்குழு கவலையைத் தெரிவிப்பதோடு, உத்தியோகபூர்வமான எண்ணிக்கையை அறிந்து கொள்ள குடும்ப ஆய்வு ஒன்றை நடத்த வேண்டுமென ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறக்கூடிய இவ்வாறான சம்பங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பது அரசாங்கத்தின் கடமை என்றும் அவ்வாறான தவறுகள் தவறான நோக்கில் இடம்பெற்றிருந்தால் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தல், மரணித்தவர்களது அடுத்த நெருங்கிய உறவினர்களுக்கு தமக்கு ஏற்பட்ட துயரத்திற்கு நிவாரணமாக பொருத்தமான நஷ்டஈடு ஒன்றை மேற்கொள்ள வேண்டுமெ ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. (99)

மோதல் இடம்பெற்ற காலங்களுக்கு வைத்தியசாலைகளுக்கு ஷெல் வெடித் தாக்குதல் ஏற்பட்டதை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. எனினும் ஆணைக்குழு முன்னுள்ள காரணிகளுக்கு ஏற்ப செல் வெடித் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் யார் என்பதைத் தீர்மானிக்க ஆணைக்குழு தவறியுள்ளது. (9.14)

மோதல் நடைபெற்ற பிரதேசங்களில் உணவு மற்றும் மருந்து உட்பட மானசீக நிவாரணங்களை வழங்குதல்: மோதல் வலயங்களில் பொதுமக்களுக்கு உணவு, மற்றும் மருந்துகளாகக் கிடைக்கும் மனிதாபிமான உதவிகளை அரசாங்கம் முறையாக அம் மக்களுக்கு வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டுச் சம்பந்தமாக விசாரணை செய்த ஆணைக்குழு கண்டுபிடித்ததன் படி மோதல் நடைபெற்ற பகுதிகளில் மருந்துகளுக்கு ஓரளவு தட்டுப்பாடு இருந்தாலும் எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களிடையே உணவு வழங்குதல் 2009 ஆரம்ப காலம் முதல் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இடம்பெயர்ந்தவர்களுக்காக பொருத்தமான போக்கு மட்டத்தில் இருந்ததாக ஆணைக்குழு கண்டுபிடித்துள்ள சிபாரிசுகளில் ஆணைக்குழு அடையாளங் காணாத போதும் மோதல் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட பகுதிகளுக்கு மருந்துகள் பற்றாக்குறை ஏற்பட்டதனை மேலும் ஆராய்நது பார்க்க வேண்டும் என ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது. (9.22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணடைந்தோர் காணாமல் போனமை பற்றிய குற்றச்சாட்டு: படையினரிடம் சரணடைந்த பின் தமது குடும்ப அங்கத்தவர்கள் காணாமல் போனதாக அநேன சாட்சியாளர்கள் மூலம் ஆணைக்குழுவினருக்கு அறிந்து கொள்ள முடிந்துள்ளது. இதன்படி, படையினரிடம் சரணடைந்த பின் இடம்பெற்ற காணாமல் போனோர் பற்றிய சம்பவங்கள் தொடர்பாக விஷேடமாக ஆராந்து பார்க்கும் தெளிவான பொறுப்பு ஒன்று அரசுக்கு இருப்பதாலும் அவ்வாறான விசாரணைகளின் போது, படை அங்கத்தவர்களது சட்ட ரீதியற்ற செயற்பாடுகள் தொடர்பாக சாட்சியங்கள் முன்வைக்கப்படுமாயின் அவ்வாறானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து அவர்கள் குற்றவாளியானால் அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என ஆணைக்குழு அறிக்கை இடுகின்றது. (9.37)

சனல் 4 வீடியோ : பிரித்தானிய தொலைக்காட்சி மூலம் விடுவிக்கப்பட்ட சனல் 4 வீடியோவின் மோதல் நடக்கின்ற பகுதிகளில் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சாட்சிகளில் குற்றம் சாட்டப்படுகின்ற கொலை, மற்றும் பாலியல் வன்முறைகள் பற்றி ரூபப் படங்கள் உள்ளதோடு, இந்த வீடியோ தொடர்பாக இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாதப் பிரதி வாதங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு இந்த வீடியோ தொடர்பாக உண்மையைக் கண்டறிய சுதந்திரமான விசாரணை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. (939)

### 5ஆம் பந்தி : மனித உரிமைகள்

தப்பிச் சென்றவர்கள் காணாமல் போன மற்றும் கடத்தப்பட்டவர்கள் சட்டவிரோதமாகக் கைது செய்தல், தான்தோன்றித்தனமான தடுத்து வைத்தல், மற்றும் தாமாகவன்றி காணாமல் போன விடயங்கள் தொடர்பாக சில சந்தர்ப்பங்களில் வருடக் கணக்காக அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற தகவல்கள் தொடர்பாக ஆணைக்குழு முன் பெருந்தொகையானவர்கள் சாட்சியம் அளித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை நிற வான் பயன்பாடு பற்றி ஆணைக்குழுவுக்கு பெருந்தொகையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எந்தவொரு நீண்ட கால நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்கும் தப்பிச் சென்றவர்கள் தொடர்பான பிரச்சினையை அவசர நடவடிக்கையாகக் கருதித் தீர்ப்பதற்காக ஒரு முழுமையான அணுகுமுறையை எடுக்க வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. மரணச் சான்றிதழ்கள் வழங்குதல், தேவையான சந்தர்ப்பங்களில் நஷ்ட ஈடு வழங்குவதற்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட வேண்டும். (9.46-9.60)

தடுத்து வைத்திருப்போர்களைக் கவனித்தல்: குற்றச்சாட்டுகள் இல்லாமல் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் குறித்து ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் சம்பந்தமான இந்த நடவடிக்கைகளினால் ஏற்படும் பிரதிபலன்களில் ஒன்று அவர்களுடைய கல்வி நடவடிக்கைகள் பலமாகப் பாதிப்பதாகும். தமது குடும்ப அங்கத்தவர்களை எங்கு தடுத்து வைத்திருப்பார்கள் என்பது பற்றி அநேக குடும்பங்களுக்குத் தெரியாமல் இருக்கின்றது. தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களது பெயர்கள், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம், மற்றைய விபரங்கள் அடங்கிய அறிக்கை உள்ளடங்கிய பூரண விபரங்கள் இருக்க வேண்டும் என்றும் அதன் விபரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களது நெருங்கிய உறவினர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர்களுடாக குடும்பங்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. விஷேடமாக எல்.ரீ.ரீ.ஈ படைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக கல்வி சீர்குலைந்தவர்கள் மற்றும் தமது முறையான கல்வி நடவடிக்கைகளை பூரணப்படுத்தும் நோக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் குறித்து விஷேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஆணைக்குழு சிபாரிசு செய்கிறது. (9.63-9.71)

சட்ட விரோத ஆயுதக் குழுக்கள்: சட்ட விரோத ஆயுதக் குழுக்கள் அல்லது எல்.ரீ.ரீ.ஈ அல்லது சில அரசியல் கட்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்திருக்கும் சில குழுக்கள் இருக்குமாயின் எதிர்காலத்தில் இவ்வாறான அமைப்புக்கள் இயங்காதிருப்பதனை உறுதி செய்வதற்காக இது தொடர்பாக ஆராய்ந்து குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும். (9.73-9.74)

சிறுவர்களை யுத்த சேவைக்குப் பயன்படுத்தல்: சிறுவர்களை யுத்த சேவைகளுக்கு பயன்படுத்துவது மோதல் காலத்தில் எல்.ரீ.ரீ.ஈ மேற்கொண்ட மிகப் பயங்கரமான குற்றம் என ஆணைக்குழு கண்டுபிடித்துள்ளதோடு, ஆணைக்குழு முன் சாட்சியமளித்த அநேகர் தம் பிள்ளைகள் எங்கே இருக்கின்றார்கள் என்று அறியாதவர்களாக இருக்கின்றார்கள். முன்னாள் படை வீரர்களை புனர்வாழ்வு அளிப்பது அதி முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். (9.77)

அனர்த்த அவதானத்துக்குள்ள குழுவினர்: மோதலின் பாராத்தை தாங்கிக் கொள்ள நிர்பந்திக்கப்பட்டுள்ள சமூகப் பிரிவினர்களில் பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயது வந்தோர் என்பதனை ஆணைக்குழு தமது கள விஜயங்களின் போது உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. பெண்கள் பங்களிப்பு இல்லாததன் காரணங்களிலான மோதல் பிரதேசங்களில் பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் மற்றும் அமைப்பு ரீதியாக மாற்றமான முறையில் கவனித்தல் அதிகரித்துள்ள நிலையில் ஆணைக்குழுவுக்கு அறிந்து கொள்ள முடிந்தது. பெண்களுக்கு எதிரான பல்வேறு வகையிலான பாலியல் மற்றும் ஆண், பெண் சமூக அடிப்படையிலான வன்செயல்கள் இடம்பெற்று வருவதனால் அவர்களுடைய கௌரவமும் பாதுகாப்பும் இருப்பும் உரிமைகளும் இழந்துள்ள முன்பு யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் தற்போது பெருந்தொகையான பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது இருக்கின்ற மோதலுக்கு பின்னரான சூழலில் பெண்களுக்கு தங்களது முறையான கல்வியைத் தொடர்வதற்கோ, வேறு வகையில் முறைசாரக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் தொழிற் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். (9.88 - 9.91)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை மோதலில் தொடர்பு பட்டதன் காரணமாக தமது அன்புக்குரியவர்களை இழந்ததனால் உள பாதிப்புக்களுக்கும் அதிர்ச்சிக்குமுள்ளான சிறுவர்களுக்கும் மனோ விஞ்ஞான ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்று ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. (993 - 996)

வயது வந்தவர்களது விஷேட தேவை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். (996ஐ) விஷேட தேவையுடையவர்களுக்கு உதவுவது அத்தியாவசியமாகும். (9.98)

## உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான பெருந்தொகையானோர் ஆணைக்குழு முன் கருத்துத் தெரிவித்தனர். ஆணைக்குழுவுக்குக் கிடைத்த தகவலின் படி யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெயர்ந்த அநேகர் மீள்குடியேறிய தமது வீடுகளைக் கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கப்படுவதோடு, மீள்குடியேறிய பகுதிகளில் பாதை, பாடசாலை மற்றும் வைத்தியசாலை போன்ற கட்டமைப்பு வசதிகளை வழங்க வேண்டும் என்றும் ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. அதேபோன்று மீளக் குடியேறியோர்களுக்கு அக்காணிகளது சட்ட ரீதியான உரிமையை ஒப்படைக்கும் தேவையும் இருக்கின்றது.

## கருத்து வெளியிடும் மற்றும் தகவல்கள் தொடர்பான உரிமை

தாம் கொலை, அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலே தமது ஊடகப் பணியை மேற்கொள்வதாக முன்னாள் மோதல் பகுதிகளில் இருந்து வந்த ஆணைக்குழு முன் சாட்சியமளித்த ஊடகவியலாளர்களின் சாட்சியங்களில் இருந்து ஆணைக்குழு அறிந்து கொள்ள முடிந்தது, தகவல் தொடர்பாக ஓரளவு சுதந்திரம் இருப்பது பற்றிய சட்டங்கள் இலங்கையில் இன்னும் ஆக்கப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு தொந்தரவு மற்றும் தாக்குதல்களை மேற்கொண்டமை தொடர்பாக ஆணைக்குழு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஊடகங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தகவல் தொடர்பான உரிமை பற்றிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. (915)

## மதங்களைப் பின்பற்றும் உரிமை உறவாடுதல் மற்றும் பயணங்களை மேற்கொள்ளும் சுதந்திரம்.

அரசாங்கம் யுத்த வெற்றியைக் கொண்டாடுவதோடு, யுத்தத்தினால் இறந்த காணாமல் போன, காயமடைந்த குடும்பங்களுக்கு தமது ஒத்துழைப்பினைத் தெரிவித்ததாக ஆணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது.

காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் அடிப்படை வசதி இன்மை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட சமாதானமான எதிர்பார்ப்புகளை அச்சுறுத்தல் மற்றும் பயமுறுத்தல்கள் மூலம் அடக்கியதாக ஆணைக்குழு முன்வைத்த சாட்சியங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு நம்பிக்கைக்குரிய நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய செயற்பாட்டிற்கு சமயங்களைப் பின்பற்றுதல், உறவுகளைப் பேணுதல் மற்றும் பிரயாணம் செய்யும் சுதந்திரம் போன்ற சுதந்திர மேம்பாடுகளில் பாதுகாப்பும் சுற்றாடலை உருவாக்குவது அவசியமானதென ஆணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது.

## 6 ஆம் பந்தி: மீள் திரும்புதலும் மீள் குடியேற்றமும்

ஆட்கள் இடம்பெயர்ந்தமை மற்றும் காணி வீடுகளை இழந்தமை மோதலினால் இழந்த பிரதான பாதிப்பாகும். இந்த மோதலின் இறுதியில் இரண்டு இலட்சத்து எண்பத்தி நான்காயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக கணக்குப் பார்க்கப்பட்டுள்ளது. வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் வருவதனாலும் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேற்றப்படுவதனாலும் மட்டும் அவர்களது பிரச்சினைகள் உடனடியாகத் தீர்வு கண்டு விடாது என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும். சகல காணிப் பாரப்படுத்தலின் போதும் பரிசீலித்துப் பார்த்தல், உறுதிப்படுத்தல் மற்றும் உறுத்தினை ஒப்படைக்கும் போது உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்க வேண்டும். உறுதி மற்றும் உரிமை தொடர்பான ஆவணங்கள் காணாமல் போயிருக்கின்றமை மீள் வந்து மீள்குடியேறியிருக்கின்ற மக்களது பிரதான பிரச்சிகையாக இருக்கின்றது.

மீள் திரும்பி இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடித்திருக்கும் காணிக் கொள்கையை அரசாங்கம் மதிக்கின்றது. ஒரு மாகாணத்தில் சனத்தொகை போக்குக்குள் செயற்கையான மாற்றத்தை ஏற்படுத்தும் ஆயுதமாக காணிக் கொள்கையை பயன்படுத்தக்கூடாது என்று ஆணைக்குழு தெரிவிக்கின்றது. (9.24)

தமது காணிகளின் உரிமை தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட ரீதியான சாட்சிகள் உள்ளவர்களிடம் தமது உரிமைகள் தொடர்பாக நீதிமன்றத்திற்கு செல்வதற்கு பதிலாக அரசாங்கத்தின் காணிக் கொள்கை துணையாக அமைய மாட்டாது என்று மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பொருத்தமான ஊடகப் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும். (9.125-9.127)

காணிக் கொள்கையை அமுல் நடத்தும் போது பாரபட்சமற்ற நீதியை உறுதிப்படுத்துவதற்காக சிவில் நிருவாகத்துக்குள் உயர்மட்டத்தில் இருந்து ஆரம்பமாகும் நிர்வாக உறுதிப்பாடொன்று தேவைப்படுகின்றது. கூடியளவு விரைவில் சிவில் நிர்வாகம் தொடர்பான சகல நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்புப் படையினர் அகற்றிக் கொள்ள வேண்டும் என்று ஆணைக்குழு பலமாக அரசுக்கு சிபாரிசு செய்கின்றது. (9.129)

எதிர்கால காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தேசிய காணி ஆணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7ஆம் பந்தி : நஷ்டஈடு வழங்குதல்**

ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில் சாலை புனரமைப்பு அதிகார சபை (சநீயை) பயங்கரவாத வன்செயல் மற்றும் அரச படை செயற்பாடுகள் காரணமாக நஷ்டம் அல்லது இழப்புகளை எதிர்கொண்ட ஆட்களுக்கு நஷ்டஈடு வழங்கும் அரசின் கொள்கையைச் செயற்படுத்துவதற்கான விசேட நிறுவனமாகும். இந்த நிறுவனம் கடும் நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தாமதிப்பதனை ஆணைக்குழு கண்டறிந்துள்ளது. இந்தக் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் முழுமையாக வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது. மீதிப் பணத்தைச் செலுத்தி முடிப்பதற்கும் எதிர்காலத்தில் கொடுப்பனவுகளை தாமதமின்றிச் செய்வதற்கும் தேவையான பணத்தை வழங்க வேண்டும்.

**8 ஆம் பந்தி: நல்லிணக்கம் தொடர்பான சிபாரிசுகள்**

யுத்தத்திற்குப் பின்னான மோதல் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றிய கண்காணிப்பு. மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்குடியேறுவதற்கு ஜீவனோபாயம், கல்வி, வைத்தியம், போக்குவரத்து, வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அரசாங்கம் பாராட்டக்கூடிய முயற்சிகளைச் செய்து வருவதாக ஆணைக்குழு தெரிவிக்கின்றது. விவசாயத்தில் உற்பத்திகள் அதிகரித்துள்ளதோடு, கடற் தொழிலில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. சில பிரதேசங்கள் கடற் தொழிலை செய்வதற்காக கடலுக்குச் செல்ல முடியாது கடற்படையிடம் இருந்து மீன் பிடிப்பதற்கு அனுமதி பெற வேண்டியுள்ளது. காணி தொடர்பான பிரச்சினைகள் இன்னும் சவாலாக உள்ளன. நிரந்தரமான வீடுகளின் தேவை மிக உச்சமாக உள்ளதோடு, அனர்த்த அவதானத்துக்குரிய குழுக்கள் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்பட வேண்டும். சில மாவட்டங்களில் இன்னும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவில்லை. மோதல் முடிவுற்று இரண்டு வருடங்கள் கழிந்தும் சமூக மற்றும் அரசியல் வாழ்வுக்கு இன்னும் அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகங்கள் மாற்றமாகக் கவனிக்கும் உணர்வு இருப்பதனை ஆணைக்குழு நினைவுபடுத்துகின்றது.

## நல்லிணக்கம் பற்றிய கண்காணிப்பும் சிபாரிசுகளும்

பாதுகாப்புப் படையினர் மீளக் கட்டியெழுப்புவதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பங்களிப்புச் செய்திருப்பதாக ஆணைக்குழு குறிப்பிட்டிருப்பதோடு, சில மாவட்டங்களில் தனியார் காணிகளில் சிறிய வர்த்தக, விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதனை குறித்து கவலை தெரிவித்துள்ள ஆணைக்குழு சிவில் மற்றும் பொது மக்கள் நடவடிகக்கைகளில் தனியார் காணிகளைப் பாதுகாப்பு படையினர் வைத்திருப்பதனை கட்டம் கட்டமாக குறைக்க வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது (9.171)

ஒருவரை ஒருவருடன் இணைந்த நீதியானதும் பாரபட்சமற்ற திறந்த மற்றும் பல்லிணத்தன்மையுடனான சமூகம் தொடர்பான பொது நோக்குப் பற்றி தெளிவாக குரல் எழுப்புவது அவசியம் என ஆணைக்குழுவின் அறிக்கை குறிப்பிடுகின்றது. கூட்டு எதிர்காலம் தொடர்பான நோக்கினைக் கட்டி எழுப்புவதற்கு முழு சமூகத்தினது கூட்டு அவசியமாகும். (9.173)

கடந்த காலத்தில் இடம்பெற்ற இழப்புக்கள் மற்றும் வேதனைகளை ஏற்றுக் கொள்ளுதல், எல்லோருக்கும் நிவாரணம் வழங்குதல், சமூக நீதி மற்றும் சாதாரண நிலைமையை மீண்டும் ஏற்படுத்துவதற்கான பொறிமுறையை வழங்குதல்.

ஒத்துழைப்பினைத் தெரிவித்தல், இது தொடர்பாக நஷ்ட ஈடு வழங்கும் பல்வேறு நடவடிக்கைகளாகும். இலங்கையின் இன நெருக்கடிக்கான பிரதான காரணம் அரசாங்கங்கள் தமிழ் மக்களுடைய நியாயமான துயரங்களை தீர்க்கத் தவறியதே என்று ஆணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது. இந்த மோதலின் காரணங்களைத் தீர்ப்பதற்காக அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவது தவிர்க்க முடியாதாகும். (9.185)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் ஆதிபத்தியத்தியத்தை செயற்படுத்தத் தவறியமை : அரசியலோடு தொடர்புடைய ஆட்கள் குற்றங்களை விளக்கும் போது குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள் அவ்வாறு செயற்படத் தவறியமை பற்றி ஆணைக்குழு குறிப்பிடுகின்றது. அரசாங்கம் மேற்கொள்ளும் துன்புறுத்தல்கள் கடத்தல், ஆயுதக் குழுக்கள் மேற்கொள்ளும் கொள்ளைகள் மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் வன்செயல்கள் தொடர்பாக ஆணைக்குழு கண்காணித்துள்ளதோடு, உத்தரவுப் பத்திரமின்றி ஆயுதங்களை வைத்திருக்கும் ஆட்களை நிராயுதப்படுத்துவதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறான குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது (9.204)

ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கைகளின் சிபாரிசுகளை முழுமையாக அமுல் படுத்தாமை குறித்து ஆணைக்குழு அதன் கவலையைத் தெரிவிக்கின்றது.

இராணுவ நிறுவனங்களில் இருந்து பொலிஸ் திணைக்களத்தினை வேறுபடுத்த வேண்டும் என்றும் சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு எற்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. (9.215)

**அரச நிர்வாகக் குறைபாடுகள்**

நிர்வாகத் தொகுதிக்குள் குறைபாடுகள் இருப்பதாகவும் இனத்தைக் கவனத்தில் கொள்ளாது சகல பிரஜைகளுக்கும் சீரான நல்லாட்சி இல்லாமை குறித்தும் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது. இது தொடர்பாக சகல பொறுப்புக் கூறுபவர்களதும் கூட்டு இணக்கப்பாடு தேவை என ஆணைக்குழு குறிப்பிடுகின்றது. எனினும் சிறுபான்மையினருக்கு பாதிப்பான வகையில் செயற்படும் சந்தர்ப்பங்களில் விசேட செயற்பாடுகள் அவசியமாகும்.

பிரஜைகளது குறைபாடுகள் தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கான நிறுவனம் நாட்டின் அரச நிர்வாகத்தில் சம்பந்தப்படும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆட்களால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படும் தவறுகள் காரணமாக சகல பிரஜைகளுக்கும் குறிப்பாக சிறுபான்மையினருக்கும் தமது குறைகளை முறைப்பாடு செய்து தீர்வு பெறக் கூடிய சுதந்திரமான நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்தப் பொறி முறைகளுக்குத் தமது பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பலமான விசாரணை அதிகாரம் இருக்க வேண்டும் (9.218)

மேற்குறிப்பிட்ட விஷேடத்துவமான பணிகளுக்கு உதவுவதற்கான ஒரு போஷாக்குப் பொறிமுறையாகும். மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படும் சமயங்களுக்கிடையிலான சமயம் மற்றும் சமாதானக் குழுக்களை அமைக்கலாம். சமயங்களுக்கும் இனங்களுக்குமிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில் அடிமட்டத்தில் இருந்து பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளலாம் (9.221)

அரசாங்கத் சேவைக்குள் அரசியல் தலையீடு இடம்பெறாதிருப்பதற்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு அரசமைப்புச் சட்டத்தில் சமத்துவமான கொள்கைகளுக்கேற்ப மெற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக சுதந்திர அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்காக ஆணைகுழு சிபாரிசு செய்கின்றது. (9.226)

எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களாக இருந்தவர்களை உள்ளடக்கி சகல அங்கத்தவர்களது உரிமைகள் குறித்து கவணம் செலுத்துகின்ற யுத்தத்திற்குப் பின்னரான நிரந்தர சமாதானம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற செயற்திட்டம் ஒன்றை வகுப்பதற்கான தலைமைத்துவத்தை அரசு ஏற்க வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. இந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்படும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அரசியல் தீர்வு மற்றும் ஜனநாயக நிறுவனங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள ஏனைய பாரதூரமான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். (9230)

மாகாணப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மேல் சபை ஒன்றினை அமைக்க வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது. (9.232)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழிக் கொள்கை

உரிய மொழிக் கொள்ளையை அமுல்படுத்துவதற்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் ஆற்றல் இருப்பது அவசியம் என ஆணைக்குழு கண்டுகொண்டுள்ளதோடு, எந்தவொரு மாவட்டத்தையும் மொழி அடிப்படையில் வகுக்கக்கூடாது என்றும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமை புரியக் கூடிய மொழி ஆற்றல் அரசாங்க ஊழியர்களிடம் இருக்க வேண்டும். சகல அரசாங்க அலுவல்களிலும் எப்போதும் தமிழ் மொழியைப் பேசக்கூடிய உத்தியோகத்தர்கள் இருப்பது கட்டாயப்படுத்தப்பட வேண்டும். (9.241 - 9.249)

## கல்வி

பல்வேறு இன சமய பின்னணியிலுள்ள பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதற்காக கலப்புப் பாடசாலைகளை அமைப்பதனை ஊக்குவிக்கும் செயற்திறன் மிகு கொள்கை ஒன்று இருக்க வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது (9.253)

## டயஸ் போரா

அரசாங்கம் குறிப்பிட்ட தரப்பினருடன் விசேடமாக சிவில் சமூகத்துடனும் நாட்டுக்கு வெளியே இருக்கின்ற பிரஜைகளது ஆற்றலைப் பயன்படுத்துவதற்காக பூரணமான அணுகுமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக பாடசாலை, வீடமைப்பு, சுகாதாரம் போன்றவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கும் ஜீவனோபாய செயற்பாடுகள் உள்ள பிரதேசங்களில் அபிவிருத்திகளின் பங்குதாரர்களுடன் டயஸ் போராவை ஆக்க ரீதியாகப் பங்கு கொள்வதற்கு சர்வதேச சமூகத்துடன் செயற்பாட்டு ரீதியாக இராஜதந்திர நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். (9.263)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களுக்கிடையிலான செயற்பாடு, சமயங்களது பணி

சகல சமயத் தலைவர்களதும் சமயங்களுக்கிடையே இருக்கும் பொதுக் குணாம்சங்களை வலியுறுத்தி கூட்டுநோக்கு மற்றும் ஐக்கிய செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் குறித்து கவனம் செலுத்தி ஐக்கியமான தலைமைத்துவம் வழங்க வேண்டும். (9.268)

## கலை மற்றும் கலாச்சாரம்

பல்வேறு சமூகங்களுக்கிடையே காணப்படும் மொழி மற்றும் கலாச்சார சமத்துவம் மற்றும் தொடர்புகள் தொடர்பாக பரந்த அறிவூட்டலைக் கட்டியெழுப்புதல். பலமான நல்லிணக்கத்தை மேம்படுத்துவதன் மூலமே வெற்றிகரமான ஆயுதமாக அமையலாம். எனவே, அரசாங்கம் இதற்கு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும். (2.274)

## அரசின் இணக்கப்பாட்டுக்கான தேவை சிங்கள மற்றும் தமிழ் சமூகங்கள்

இரண்டுக்குமிடையிலான அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் மோதல் தொர்பான துயரத்தினை முழுமையாக ஏற்றுக் கொண்டு, தாம் செய்த தவறுக்காக கூட்டாகக் கவலை தெரிவிப்பது நல்லிணக்க செயற்பாட்டுக்கு அவசியமானது. துயர்மிகு மோதலினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு படுத்துவதற்காக தேசிய தினமொன்றில் வேறொரு வைபவம் நடத்தப்பட வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது.

9 ஆம் பந்தி : பிரதான அவதானிப்புக்களும் மற்றும் சிபாரிசுகளும்

இந்தப் பந்தியில் 4 முதல் 8 வரையான பந்திகளில் உள்ள சகல ஆரம்ப முக்கிய அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் ஒன்று சேர்க்கப்பட்டு, இங்கு இலக்கமிடப்பட்ட 285 ஆம் பந்தி இருந்தாலும் உரிய சிபாரிசுகள் இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**160 வரை 105 பக்கங்களிலான அளவுகளாகும்.**

இலங்கை அரசு 2012 யூலை 26 வரை ஆங்கில மொழியில் மட்டும் தமது தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை இணையத்தளத்தின் ஊடாக வெளியிட்டிருந்தது. எல்.எல். ஆர்.சி.யினால் மேற்கொள்ளப்பட்ட சகல சிபாரிசுகள் தேசிய செயற்திட்டத்திற்கு உட்படாதிருந்த எல்.எல்.ஆர்.சி பற்றிய விமர்சனங்கள்

1. எல்.எல்.ஆர்.சி ஆணைக்குழுவை நியமித்தமை சர்வதேச சமூகத்தை ஆறுதல் படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்த தப்பிச் செல்லும் உபாய வழிமுறையாகும்.

2. சர்வதேச மனிதாபிமானச் சட்டம் (IHL) மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தை மீறுவது தொடர்பான முறைப்பாட்டை ஆராய்தல். ஒப்படைப்பின் போது தெளிவாக அதிகாரம் வழங்கப்படாமை.

3. ஆணைக்குழுவுக்குள் இன மற்றும் ஆண், பெண் சமத்துவம் பேணப்பட வில்லை.

4. சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தொடர்பான விசேட ஆற்றல் இல்லாமை

5. பொதுவான நிதிப் பற்றாக்குறை

6. கொழும்பில் கழித்த காலம் (56) நாட்கள், வடகிழக்கில் கழித்த நாட்கள் (22) இதற்கிடையில் சமத்துவம் பேணப்படாமை.

7. மக்கள் கருத்து தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் போதியளவு பிரச்சாரம் செய்யாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மோதல் காலத்தில் இலங்கையில் இருந்த தற்போது வெளிநாட்டிலிருக்கின்ற இலங்கையர்களது கருத்துக்களை ஆணைக்குழு பெறாமை.

9. சாட்சியாளர் குறித்து செலுத்தப்பட்ட சாதாரண கவனம், சாட்சிய விசாரணை நடுவில் நிறுத்தப்பட்ட குற்றச்சாட்டு, சாட்சியாளர்களுக்கு போதிய பாதுகாப்பு இன்மை, அரசாங்கத்திற்கு சாதகமான சாட்சியாளர் இன்மை.

10. சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறுதல் மற்றும் மனித உரிமைகளை மீறுதல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது, யுத்தக் குற்றங்கள் செய்தவர்களது பொருப்பினைப் பாரப்படுத்த ஆணைக்குழு தவறியது.

11. மனித உரிமைகளை மீறியது தொடர்பாக எல்.எல். ஆர்.சி. அறிக்கையில் உள்ள நிச்சயமற்ற தன்மையும் விசேட தன்மையும் இல்லாமை.

12. வடக்கு, கிழக்கில் பெண்கள் எதிர்நோக்கும் வன்செயல்கள் மற்றும் பாதுகாப்பற்ற பாரதூர தன்மை பற்றி முக்கியத்துவம் அளித்து காட்டத் தவறியமை குறித்து ஆணைக்குழு விமர்சனத்துக்குள்ளாகியது.

13. அரசாங்கத்திற்குச் சாதகமான சாட்சியாளர்களை மட்டும் தெரிவு செய்தமை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டமை.

14. வைத்தியசாலைக்கு ஷெல் வெடித் தாக்குதலை மேற்கொண்டதாக ஆணைக்குழு முடிவு செய்ததாகவும், இதற்கு யார் பொறுப்பு என்று கூற தவறியமை குறித்து ஆணைக்குழு விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. வைத்தியசாலைகளுக்குக்குச் ஷெல் வெடித் தாக்குதல்கள் மேற்கொண்டது யார் எனத் தீர்மானிக்க விசாரணை செய்யப்பட வேண்டுமென விமர்சகர்கள் கூறியிருக்கின்றனர்.

16. ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களின் படி சரணடைந்தவர்கள் காணாமல் போனவர்களை அரசாங்கக் கொள்கைப்படி தேடிக் கண்டுபிடிப்பதற்கு ஆணைக்குழு தவறியமை பற்றி ஆணைக்குழு விமர்சனத்துக்குள்ளாகியது.

17. பாதுகாப்புப் படையினர் மோதல் காலத்தில் மரணத்திற்குள்ளான மொத்த பொது மக்கள் தொடர்பில் அரசாங்கம் நினைத்தவாறு வன்னியின் சனத்தொகையை கணக்கிலெடுக்காது இருப்பதாகவும் பொது மக்களது மரண எண்ணிக்கை பற்றி சான்றுகளை தடுப்பதற்கு அரசாங்கம் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதித்துவங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு மோதல் நடக்கும் பிரதேசங்களுக்கு உட்பிரவேசிப்பதனை நிராகரித்ததாகவும் இருக்கும் குற்றச்சாட்டினைப் பற்றி தீர்வைப் பெற்றுக் கொடுக்க தவறியதாகவும் ஆணைக்குழு விமர்சனத்துக்குள்ளாகியது.

18. சனல் 4 வீடியோ தொடர்பாக ஆணைக்குழு வழங்கியுள்ள முடிவு பிரித்தானிய பிரச்சாரகர்களை சவாலுக்கு உள்ளாக்கியது. அதிலிருக்கும் சகல தலைப்புக்களும் தமது தொழில்நுட்ப நிபுணர்கள் பகுப்பாய்வு செய்துள்ளதாகவும் அவை நம்பகத்தன்மை இல்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

19. நீதித்துறை பொலிஸ், அரச சேவை போன்ற அரச நிறுவனங்கள் அரசியல் மயமாகி பலவீனமாவதற்கு 18 வது அரசமைப்பு சீர்திருத்தத்தின் பணி பற்றி ஆணைக்குழு ஆராய தவறியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LLRC அறிக்கையானது இலங்கை
அரசாங்கத்தினால் சட்டபூர்வமாக
வெளியிடப்பட்ட கல்விசார் கருவியாக
சிவில் சமூகத்திற்கு வழங்க-
ப்பட்டுள்ளது. இலங்கை சமாதானப்
பேரவையினால், 388 பக்கங்களைக்கொ-
ாண்ட இவ் அறிக்கையின்
உள்ளடக்கத்தை விளக்கமான
முறையில் தெளிவூட்டும் சாராம்சத்தை
சிறு ஏடாக வெளியிடும் பணியை மேற்கொ-
காள்ள வாய்பு கிடைத்ததையிட்டு
பெருமையடைகிறது மொத்தமாக ஆறு
தொடர் புத்தகங்களைக்கொண்டது.
இவை ஆங்கில மொழி வெளியீட்டின்
தமிழ் மொழிபெயர்ப்பாகும்


# இலங்கை தேசிய சமாதானப் பேரவை

12 - 14 புராண விகாரை வீதி, கொழும்பு 06

தொ.பே.இல-0112 818344 - 0112 854127 தொலைநகல் -0112 819 064

இணையத்தளம் - www.peace-srilanka.org மின் அஞ்சல் - npc@sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org